**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16.09.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் அறிவியலாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் வேளாண் இணை பேராசிரியர்களுக்கு, "**திறன் மேம்பாட்டுப் பயிற்சி**" 16.9.2026 முதல் 18.9.2026 வரை அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியைத் துவக்கி வைத்து பேசிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் முனைவர் மு. ரவீந்திரன் அவர்கள், ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்கள், அறிவு மற்றும் தொழில்முறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் மூன்று நாள் ஆசிரியர் மேம்பாட்டு பயிலரங்கில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி, நற்பண்புகள், திறன்கள் மற்றும் எதிர்காலத் தொழில் வாழ்க்கையை வடிவமைப்பதில் ஆசிரியர்களின் முக்கியப் பங்கு குறித்தும், புதுமையான கற்பித்தல் முறைகள் மற்றும் நவீன கற்றல் அணுகுமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியம் குறித்தும், உலகளாவிய தரநிலைகளையும், உருவாகி வரும் புதிய வாய்ப்புகளையும் எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களைத் தயார்படுத்துவதற்குத் தேவையான நவீன கற்பித்தல் நுட்பங்கள் மற்றும் அணுகுமுறைகள் ஆகியவற்றை பேராசிரியர்களுக்கு வழங்கும் வகையில் இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தனி அலுவலர் (வெளியீடுகள்) முனைவர். மா.இரா. சீனிவாசன் அவர்களின் சிறப்புரையில்,

பாரம்பரிய வகுப்பறை, கரும்பலகை அடிப்படையிலான கற்பித்தல் முறைகளைத் தாண்டி, கல்வித்துறையில் உருவாகி வரும் புதிய சிந்தனைகள் மற்றும் புதுமையான அணுகுமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை இந்நிகழ்ச்சி வலியுறுத்தியது. ஆராய்ச்சிக்கான தெளிவான தரநிலை செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் மாணவர்களின் மதிப்பீட்டிற்கான வெளிப்படையான, தெளிவான மதிப்பீட்டு அளவுகோல்கள் உருவாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அறிவியல் சிறப்பின் அடிப்படையாக நேர்மையான, மீண்டும் மேற்கொள்ளக்கூடிய மற்றும் தடமறியக்கூடிய ஆராய்ச்சி அமைய வேண்டும் என்றும், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கல்விசார் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில், ஆசிரியர்களுக்கு புதிய சிந்தனைகள், அனுபவங்கள் வழங்கப்பட உள்ளது என்றார்.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த கற்பித்தல் முறைகள், உயர்தர ஆராய்ச்சி முன்மொழிவுகளை உருவாக்குதல், விளையாட்டு அடிப்படையிலான கற்றல் மற்றும் வேளாண் விரிவாக்கத்தில் நுண்ணறிவு தொழில்நுட்பங்கள், இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை, கல்விசார் செயலிகள், உயர்தர ஆராய்ச்சி முன்மொழிவுகளை உருவாக்குதல், இந்தியக் கல்வி அமைப்பைப் புரிந்துகொள்ளுதல், கல்விசார் மேன்மைக்கான தர உறுதிப்பாடு, Q1 தர அறிவியல் ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதற்கான உத்திகள், இந்தியக் கல்வி அமைப்பைப் புரிந்துகொள்ளுதல் ஆகிய தலைப்புகளில் இப்பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

வனவியல் துறை பேராசிரியர் மற்றும் பயிற்சிகள் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு. உமேஷ் கண்ணா அவர்கள் வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் (ARM) முனைவர் த. சம்சாய் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*